www.StudyGuideIndia.com

Question Paper Sl. No. 168419

**7108**

Register Number

— — —

**Part III**

# கணிப்பொறியியல் / COMPUTER SCIENCE

**( Vocational Component under General Stream )**

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

குறிப்பு : i) பகுதி I ல் உள்ள அனைத்து ( பல்வகை வினாக்கள் ) வினாக்களுக்கும் ( 1 முதல் 75 வரை ) தனியே வழங்கப்பட்டுள்ள OMR விடைத்தாளில் மட்டுமே விடையளிக்க வேண்டும். ( O.M.R. விடைத்தாளில் உள்ள அறிவுரைகளை காண்க. )

ii) வினாத்தாளின் வலதுபக்க மேல் மூலையில் தரப்பட்டுள்ள '—' ( dash ) குறியீடு எந்த எண்ணிக்கையில் உள்ளதோ அதற்கேற்ப O.M.R. விடைத் தாளில் [—] (1) அல்லது [— —] (2) அல்லது [— — —] (3) அல்லது [— — — —] (4) எனும் கட்டம் HB பென்சிலால் நிழலிடப்படவேண்டும்.

iii) வினா எண்கள் 1 முதல் 75 வரை உள்ள வினாக்களுக்கு விடையளிக்க ஒதுக்கப்பட்ட நேரம் முதல் 75 நிமிடங்கள் ஆகும்.

iv) பகுதி II மற்றும் பகுதி III ல் உள்ள வினாக்களுக்கு ( 76 முதல் 110 வரை ) முதன்மை விடைத்தாளில் விடையளிக்க வேண்டும்.

## பகுதி – I

மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிடுக : $75 \times 1 = 75$

1. தாவலுக்கு காரணமான நிரல் கூற்றுகள்

A) கட்டுப்பாட்டு கூற்றுகள் B) மதிப்பிருத்து கூற்றுகள்

C) உள்ளீட்டு/வெளியீட்டு கூற்றுகள் D) நிபந்தனை கூற்றுகள்.

2. பின்வருவனவற்றுள் எது நிரலின் நீளத்தை குறைக்க பயன்படுகிறது ?

A) சிறப்புச் சொற்கள் B) செயற் கூறுகள்

C) வில்லைகள் D) மாறிகள்.

[ Turn over

www.StudyGuideIndia.com

3. செயற்குறி பெயருடன் மெய்யான அளபுருக்கள் பின்வரும் எதனைக் கொண்டு பிரிக்கப்படும் ?

A) , ( comma ) B) ; ( semi-colon )

C) . ( dot ) D) & ( and )

4. fact ( float, char, double ) என்ற செயற்கூறு முன்வடிவு திருப்பி அனுப்பும் மதிப்பின் தரவு வகை

A) char B) float

C) int D) double.

5. பின்வருவனவற்றுள் எது வரையெல்லை தீர்மானிப்பு செயற்குறி ?

A) & B) *

C) :: D) ? :

6. இனக்குழுவின் உடற்பகுதி எந்த குறிகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் ?

A) ; B) ( )

C) { } D) [ ]

7. உறுப்பு செயற்கூறுகள் என்பவற்றை இப்படியும் அழைக்கலாம்

A) பண்புக்கூறுகள் B) வழிமுறைகள்

C) தரவினம் D) அணுகியல்பு வரையறுப்பிகள்.

8. நினைவகத்தில் static உறுப்பு மாறிக்கு எத்தனை நகல் இருக்கும் ?

A) இரண்டு B) மூன்று

C) ஒன்று D) நான்கு.

9. பின்வருவனவற்றுள் எது பொருள்நோக்கு நிரலாக்கத்தின் ( OOPS ) அடிப்படையான பண்புக்கூறு ?

A) தரவு மறைப்பு B) தரவு அருவமாக்கம்

C) தரவு இனம் D) இனக்குழுக்கள்.

10. இனக்குழுவின் உறுப்புகளை பின்வரும் எந்த செயற்குறி மூலம் அணுக முடியும் ?

A) . ( Dot ) B) , ( Comma )

C) ; ( Semi-colon ) D) : ( Colon ).

www.StudyGuideIndia.com

11. தரவுத்தள மேலாண்மை அமைப்பின் ( DBMS ) செயற்பாடுகளை எத்தனை பொதுப் பிரிவுகளாகப் பிரிக்கலாம் ?

A) 4
B) 3
C) 2
D) 6.

12. ஸ்டார் ஆபீஸ் பேஸில் ஒரு அட்டவணையின் ஒவ்வொரு வரிசையும் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A) கோப்பு
B) பதிவு
C) புலம்
D) நுண்ணறை.

13. பின்வருவனவற்றுள் எது ஸ்டார் ஆஃபீஸ் பேஸில் காணப்படும் புலவகை அல்ல ? ( field type )

A) Time
B) Date
C) Real
D) String.

14. எந்தக் கட்டளை, உரை ஆவணத்தில் உள்ள தலைப்புகளை நிகழ்த்தலில் சேர்க்க பயன்படுகிறது ?

A) File → Send → Outline to presentation
B) File → New → Outline to presentation
C) File → Outline to presentation → Send
D) File → Outline to presentation → New.

15. வரிசைப்படுத்தப்பட்ட பதிவுகளை பழையபடி பார்க்க பின்வரும் எந்த பணிக்குறியை தேர்வு செய்ய வேண்டும் ?

A) Remove filter / sort
B) Remove sort
C) Sort remove
D) Remove sort/filter.

16. ஸ்டார் ரைட்டர் அட்டவணையில் தேர்வு செய்யப்பட்டநெடுவரிசையை நீக்குவதற்கு எந்த கட்டளையைப் பயன்படுத்த வேண்டும் ?

A) Table → Delete → Columns
B) Tools → Delete → Columns
C) Format → Delete → Columns
D) Format → Column → Delete.

[ Turn over

www.StudyGuideIndia.com

17. ஸ்டார் ரைட்டரில் அட்டவணையில் கொடாநிலையாக ஒவ்வொரு சிற்றறையும் பின்வரும் எதைக் கொண்டிருக்கும் ?

A) எல்லைகள் ( Border )

B) குறுக்கு வரிசைகள் ( Rows )

C) நெடுக்கைகள் ( Columns )

D) குறுக்கு வரிசைகள் மற்றும் நெடுக்கைகள் ( Rows and Columns ).

18. எத்தனை முறைகளை பயன்படுத்தி பக்கத்தினுடைய ஓரத்தின் அளவை மாற்ற முடியும் ?

A) மூன்று B) நான்கு

C) இரண்டு D) ஆறு.

19. ஸ்டார் ரைட்டர் ஆவணத்தின் கொடாநிலை ஓரம் மேல் மற்றும் கீழ் பாகத்தில் எத்தனை அங்குலம் இருக்கும் ?

A) 1 அங்குலம் B) 1·25 அங்குலம்

C) 1·5 அங்குலம் D) 0·5 அங்குலம்.

20. பின்வரும் எந்த கட்டளை மூலம் தேர்ந்தெடுத்த நுண்ணறைகளில் தரவு வரிசைகளை ( Generate series ) உருவாக்கலாம் ?

A) File B) Fill

C) View D) Tools.

21. ITES ( ஐடிஇஎஸ் ) ன் வெற்றிக்கு இன்றியமையாதது

A) பாதுகாப்பு அரண் உடைத்தல் B) Digitization

C) தரவுப்பாதுகாப்பு D) கணிப்பொறி நன்னெறி.

22. மருத்துவப் பெயர்ப்பாவணம் எத்தனை முதன்மையான படிநிலைகளைக் கொண்டது ?

A) 2 B) 3

C) 4 D) 5.

23. பின்வருவனவற்றுள் எவை பிற வடிவங்களில் உள்ள தகவல்களை டிஜிட்டல் ( Digital ) வடிவில் மாற்றியமைப்பது ?

A) Digitization B) தரவு மேலாண்மை

C) அழைப்புதவி மையம் D) தரவு உள்ளீடு.

www.StudyGuideIndia.com

24. தகவல் தொழில் நுட்பத்தின் பலன்கள் சாதாரண மனிதர்களை சென்றடைய எத்தனை தொழில்நுட்பக் கூறுகள் தேவை ?

A) 3 B) 4

C) 5 D) 6.

25. போலியான வன்பொருள், மென்பொருள்களை உருவாக்குவதும், பயன்படுத்துவதும் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A) Crime B) Cracking

C) Piracy D) Virus.

26. பின்வருவனவற்றுள் எவை தொடர்புடைய செயற்கூறுகள், அச்செயற்கூறுகளுக்கான தரவுகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு குழுவாகும் ?

A) செயல்பாடு B) நிரல்

C) பொருள் D) கூற்று.

27. பின்வருவனவற்றுள் எவை தரவுகளுக்கு பாதுகாப்பை அளிக்கிறது ?

A) இனக்குழு அல்லது தரவு அருவமாக்கம்

B) தரவு மறைப்பு அல்லது தரவு அருவமாக்கம்

C) தரவு அருவமாக்கம் அல்லது மரபுரிமம்

D) அடிப்படை அல்லது தருவிக்கப்பட்ட இனக்குழு.

28. C++ என்னும் பெயரை சூட்டியவர்

A) ஜேர்ன் ஸ்ட்ரௌஸ்ட்ரப் B) டெனிஸ் ரிட்சி

C) டேன் பிரிக்கிலின் D) ரிக் மாஸ்சிட்டி.

29. பின்வருவனவற்றுள் எது ஒரு நிரலில் உள்ள மீச்சிறு தனித்த அலகு ?

A) மாறிகள் B) வில்லைகள்

C) மாறிலிகள் D) செயற்குறிகள்.

30. பின்வருவனவற்றுள் எந்த செயற்குறி நிபந்தனைச் செயற்குறி என்றழைக்கப்படுகிறது ?

A) ஒரும B) இரும

C) மும்ம D) ஒப்பீட்டு.

www.StudyGuideIndia.com

31. ஒரு இனக்குழுவில் எத்தனை அழிப்பி இருக்க முடியும் ?

A) 3 B) 2

C) 4 D) 1.

32. எந்த செயற்குறி தருவிக்கப்பட்ட இனக்குழுவின் பெயருக்கு அடுத்து இடம் பெறும் ?

A) :: B) :

C) ; D) !

33. பின்வருவனவற்றுள் எது முன்னியல்பான காண்புநிலை பாங்கு ?

A) Public B) Protected

C) Private D) Protect.

34. பின்வரும் எந்த இனக்குழுக்களில் பொருள்களை உருவாக்க முடியாது ?

A) அழிப்பி B) மதிப்பிலி தரவினம்

C) கருத்தியல் D) ஆக்கி.

35. தரவுகளை சேமித்து வைக்கவும், மேலாண்மை செய்யவும் உதவுவது

A) உணர்ச்சி கொள்கலன்கள் B) தரவுக் காப்பகம்

C) சொந்த படைப்பாக்க கருவி D) நினைவுச் சட்டகம்.

36. Operator <symbol> ( ) செயற்குறியை இனக்குழுவின் எந்தப் பகுதியில் அறிவிக்க வேண்டும் ?

A) private B) protect

C) public D) protected.

37. ஒரு செயற்குறிக்குப் புதிய பொருளை வழங்கும் தொழில்நுட்பம் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

A) operator overriding B) operator( )

C) operator overrule D) operator overloading.

38. ஆக்கியின் பெயர் எவற்றின் பெயராக இருக்க வேண்டும் ?

A) தரவினத்தின் பெயராக B) இனக்குழுவின் பெயராக

C) வரையெல்லை பெயராக D) வழிமுறையின் பெயராக.

www.StudyGuideIndia.com

*குறிப்பு :* கீழ்க்காணும் நிரலை படித்து வினா எண் **39** மற்றும் **40**-ற்கு சரியான விடையளிக்கவும் :

```
class simple
{
    private:
        int x;
    public:
        simple (int y)
        {x = y ;}
};
void main( )
{
    simple s(6);
}
```

39. எத்தனை பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன ?

A) 0 B) 7

C) 1 D) 6.

40. மேற்கண்ட நிரலில் எத்தகைய ஆக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது ?

A) அளபுரு ஏற்கும் ஆக்கி B) நகல் ஆக்கி

C) தானமைவு ஆக்கி D) அளபுரு இல்லாத ஆக்கி.

41. எவ்வளவு வண்ணங்களுக்கு குறைவாக உள்ள ஒளிக்காட்சிகள் இருளடைந்து காணப்படும் ?

A) 254 B) 263

C) 255 D) 256.

42. MMS என்பது

A) Multimedia Mailing Services

B) Multimedia Messaging System

C) Multimedia Mailing System

D) Multimedia Messaging Services.

www.StudyGuideIndia.com

43. GIF ன் விரிவு

A) Graphic Interchange File
B) Graphic Interchange Format
C) Graphic Information File
D) Graphic Information Format.

44. Real Audio Format கோப்புகளின் extension

A) .rm அல்லது .rF
B) .ram அல்லது .rF
C) .rm அல்லது .ram
D) .rm அல்லது .rads

45. AVI படிவம் எந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது ?

A) IBM
B) Microsoft
C) Apple
D) Macromedia.

46. ஸ்டார் ஆபீஸ் ரைட்டரில் செருகும் இடம் இடப்புறமாக ஒரு சொல் அளவுக்கு நகர்த்துவதற்கு அழுத்த வேண்டிய சாவிகள் எவை ?

A) Ctrl + Left arrow
B) Alt + Left arrow
C) Shift + Left arrow
D) Tab + Left arrow

47. எந்த குறுக்கு வழியைப் பயன்படுத்தி ஸ்டார் ஆபீஸ் ரைட்டரில் ஒரு உரையை வெட்ட முடியும் ?

A) Ctrl + c
B) Ctrl + t
C) Ctrl + x
D) Ctrl + u.

48. பின்வரும் எந்த எழுத்துவகை அலுவலக ஆவணங்களில் பயன்படுத்தப்படுகிறது ?

A) Fajita
B) Symbol
C) Times New Roman
D) Wingdings.

49. உரை வடிவூட்டலில், கொடாநிலைகளின் தொகுப்புக்கு வழங்கப்படும் பெயர்

A) Style
B) Font
C) Format
D) Bullets.

50. பின்வரும் எந்த சாவி மூலம் எழுத்துப் பிழை திருத்தும் உரையாடல் பெட்டியை பெறலாம் ?

A) F5
B) F6
C) F7
D) F8.

www.StudyGuideIndia.com

51. பின்வரும் எந்தக் கட்டளை மூலம் அட்டவணைத்தாள் கட்டங்களுடன் அச்சிடப்படும் ?

A) Format → Sheet B) Format → Page

C) Format → Grid D) File → Print → Grid.

52. பதிவுகளை அகர வரிசையில் ( Alphabet ) அல்லது எண்களின் ஏற்ற இறக்க வரிசையில் ஒழுங்கு செய்வது

A) தேடுதல் ( Searching ) B) வரிசையாக்கம்( Sorting )

C) சேர்த்தல் ( Merging ) D) வடிகட்டுதல் ( Filtering ).

53. அட்டவணைச் செயலி எந்த தரவுதள வகைக்கு எடுத்துக்காட்டு ?

A) ஒற்றைக் கோப்புத் தரவுத்தளம் B) வலையமைப்புத் தரவுத்தளம்

C) உறவுநிலைத் தரவுத்தளம் D) படிநிலைத் தரவுத்தளம்.

54. ஸ்டார் ஆபீஸ் பேஸில் எத்தனை வகை தரவுத்தளங்கள் உள்ளன ?

A) 2 B) 4

C) 5 D) 3.

55. உரை ஆவணத்தில் நுண்ணறை பரப்பை ( Cell range ) நகலெடுக்கும் போது Paste Special உரையாடல் பெட்டியில் எந்த இணைப்பை தேர்வு செய்ய வேண்டும் ?

A) DEE link B) Paste link

C) Copy link D) DDE link.

56. தரவினங்களை எத்தனை வகையினங்களாக பிரிக்கலாம் ?

A) 3 B) 2

C) 1 D) 4.

57. எது தரவு ஈர்ப்பு ( Extraction ) செயற்குறி ?

A) << B) >>

C) > D) <

58. எது C++ மொழியில் உள்ளீடாகப் பெற முன் வரையறுக்கப்பட்டுள்ள பொருள் ?

A) cin B) input

C) cout D) read



www.StudyGuideIndia.com

59. பின்வருவனவற்றுள் எது மதிப்பிருத்து செயற்குறி ?

A) +

B) <<

C) =

D) -

60. While < ( condition ) > { ..... } மடக்கு என்பது

A) நுழைவு சோதிப்பு மடக்கு

B) வெளியேறல் சோதிப்பு மடக்கு

C) கிளை பிரிப்பு மடக்கு

D) பின்னலான மடக்கு.

61. C++ மொழியில் தருவிக்கப்பட்ட தரவினம் எது ?

A) int

B) float

C) array

D) char.

62. அணியின் உறுப்பெண்ணிக்கை எப்போதும் எவ்வாறு இருக்க வேண்டும் ?

A) negative

B) positive

C) char

D) float.

63. write( ) செயற்கூறில் எத்தனை அளபுருக்கள் இருக்கும் ?

A) ஒன்று

B) மூன்று

C) நான்கு

D) இரண்டு.

64. பின்வருவனவற்றுள் எது C++ மொழியின் மிக முக்கியமான பண்புக்கூறு ?

A) செயற்கூறு

B) அணி

C) சுட்டுமாறி

D) இனக்குழு.

65. ஓர் இனக்குழுவின் வரையறுப்பு எத்தனை பகுதிகளைக் கொண்டது ?

A) இரண்டு

B) மூன்று

C) நான்கு

D) ஆறு.

66. முன்வடிவமைத்த படிவங்களைக் கொண்டு நிகழ்த்தலை உருவமைக்க பின்வரும் எந்த பொத்தான்களை அழுத்த வேண்டும் ?

A) SHIFT + ALT + N

B) SHIFT + CTRL + N

C) CTRL + ALT + N

D) SHIFT + TAB + N.

www.StudyGuideIndia.com

67. பின்வரும் எந்த view சில்லுகளின் வரிசையை மாற்றவும் பெயர் மற்றும் தலைப்புகளை பதிப்பிக்கவும் உதவுகிறது ?

A) Normal
B) Notes
C) Handouts
D) Outline.

68. Media Player சன்னல் திரையை திறக்க தேர்ந்தெடுக்க வேண்டியது

A) Tools → Media player
B) Slide show → Media player
C) Insert → Media player
D) View → Media player.

69. நிகழ்த்தலில் Style list ஐ திறக்க தேர்வு செய்ய வேண்டிய சாவி

A) $F_{10}$
B) $F_{11}$
C) $F_{12}$
D) $F_2$

70. சில்லுவின் பெயரை மாற்ற தேர்ந்தெடுக்க வேண்டியது slide →

A) Rename slide
B) New slide
C) Rename
D) Slide rename.

71. அட்டவணைக் கோப்பில் ஒரு நுண்ணறையிலிருந்து இன்னொரு நுண்ணறை வரை தொடர்ச்சியாக உள்ள நுண்ணறைகளை எவ்வாறு அழைப்பர் ?

A) நுண்ணறை முகவரி ( cell address )
B) நுண்ணறை சுட்டி ( cell pointer )
C) பரப்பு ( range )
D) இயக்கிகள் ( operators ).

72. பின்வருவனவற்றுள் எது பார்வையிடு ( Reference ) இயக்கி ?

A) < ( less than )
B) & ( and )
C) + ( plus )
D) : ( colon )

73. Microsoft நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட அட்டவணைச் செயலி

A) Improve
B) Quattro Pro
C) Excel
D) VisiCalc.

74. ஸ்டார் ஆபீஸ் கால்க்கில் எது சமம் இல்லை ( inequality ) இயக்கியை குறிக்கும் குறியீடு ?

A) ! =
B) < >
C) = =
D) =

75. பின்வரும் எந்தக் குறி தனித்த ( Absolute ) நுண்ணறை முகவரியை குறிக்க உதவுகிறது ?

A) !
B) *
C) &
D) $



www.StudyGuideIndia.com

## பகுதி – II

ஏதேனும் இருபது வினாக்களுக்கு ஓரிரு வார்த்தைகளில் விடையளி : 20 × 2 = 40

76. ஸ்டார் ஆபீஸ் ரைட்டரில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணங்களில் வேலை செய்தலைப் பற்றி விவரி.

77. தலைப்பு, அடிக்குறிப்பு என்பதன் பொருள் என்ன ?

78. அட்டவணைச் செயலியால் ஏற்படும் நன்மைகள் யாவை ? ஏதேனும் நான்கினை எழுதுக.

79. ஸ்டார் ஆபீஸ் கால்கில் உள்ள தேதி கணக்கீடு பற்றி எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.

80. படிநிலை தரவுத்தளத்தைப் பற்றி குறிப்பு எழுதுக.

81. தரவுத்தள மேலாண்மை அமைப்பு ( DBMS ) என்றால் என்ன ?

82. குறுக்கல் என்றால் என்ன ? குறுக்கலின் வகைகள் யாவை ?

83. உள் ஒலி மற்றும் ஒளி ( inline sound and video ) பற்றி எழுதுக.

84. சில்லுமாற்றல் என்றால் என்ன ?

85. Presentation-இல் சில்லுகளை சேர்த்தல், நீக்குதல், மாற்று பெயரிடுதல் பற்றி குறிப்பு எழுதுக.

86. பல்லுருவாக்கம் என்றால் என்ன ?

87. C++ இன் குறிப்பெயர்கள் ( identifiers ) பற்றி சிறு குறிப்பு எழுதுக.

88. ஏதேனும் நான்கு C++ இன் நிறுத்தற் குறிகளைக் ( punctuators ) கூறி அவற்றைப் பற்றி ஒருவரி எழுதுக.

89. C++ மொழியில் பண்புணர்த்திகளின் விளைவுகள் யாவை ?

90. continue மற்றும் break பற்றி சிறு குறிப்பு எழுதுக.

91. செயற்கூறு முன்வடிவின் பொதுவான தொடர் அமைப்பை எழுதி எடுத்துக்காட்டு தருக.

92. C++ இல் write( ) செயற்கூறினை பற்றி விவரி.

www.StudyGuideIndia.com

93. செயல் கூறுகளுக்கு அணிகளை செயலுறுபுகளாக அனுப்பி வைக்கும் போது எவ்வாறு செயல்படும் ?

94. தரவு மறைப்பு - வரையறு.

95. C++ இல் static தரவு உறுப்பு பற்றி எழுதுக.

96. செயற்கூறு பணி மிகுப்பில் செயற்கூறுகள் எவ்வாறு இயக்கப்படுகின்றன ?

97. ஆக்கியின் ( constructor ) செயல்பாடுகள் யாவை ?

98. மரபுரிமத்தின் பலன்கள் யாவை ?

99. மின்வங்கி சேவை பற்றி குறிப்பு வரைக.

100. 'கணிப்பொறி நேரம் களவாடப்படல்' என்றால் என்ன ?

## பகுதி – III

பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஏழு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஐந்திலிருந்து பத்து வரிகளுக்குள் விடையளி : $7 \times 5 = 35$

101. ஒரு ஆவணத்தை தட்டச்சு செய்து முடித்தபின் எழுத்துப்பிழை சரிசெய்வது எவ்வாறு ? விளக்குக.

102. அட்டவணை வடிவூட்டல் பட்டிப்பட்டையில் உள்ள குறும்படங்களின் வேலைகள் யாவை ?

103. ஸ்டார்கால்க் அட்டவணைத் தாளில் பொருள்களை சேர்ப்பது ( insert object ) எவ்வாறு என்பதை விளக்குக ?

104. ஸ்டார் ஆபீஸ் கால்கில், அட்டவணைச் செயலியைக் கொண்டு எண் வரிசை உருவாக்குதலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

105. தரவுத்தளத்தைக் கையாளும் முறைகளைப் பற்றி விவரிக்கவும்.

106. நுழைவு-சோதிப்பு மடக்குகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

107. C++ இல் குறிப்பு மூலம் அழைத்தலை ( call by reference ) எடுத்துக்காட்டுடன் விளக்குக.

108. செயற்குறி பணிமிகுப்பிற்கான விதிகளை எழுதுக.



www.StudyGuideIndia.com

109. கீழ்க்கண்ட C++ நிரலிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக :

```
#include<iostream.h>
class base
{
base()
{
cout<<"\nConstructor of base";
}
;base()
{
cout<<"\nDestructor of base";
}
}
class derived::public-base
{
public
derived()
{
cout<"\nConstructor of derived";
}
!derived()
{
cout<<"Destructor of derived";
};
};
class derived:publicly derived2
{
public:
derived2()
{
cout<<"\nConstructor of derived2";
}
!derived2()
{
cout<<"\nDestructor of derived2";
}
};
void base()
{
x.derived2;
x1.derive;
};
```

www.StudyGuideIndia.com

110. கீழ்க்கண்ட C++ நிரலின் வெளியீட்டினை எழுதுக :

```
#include<iostream.h>
#include<conio.h>
class distance
{
int feet, inches ;
public:
void dist_assign(int f,int i)
{
feet=f ;
inches=i;
}
void display()
{
cout<<"\nFeet:"<<feet<<"\nInch:"<<inches;
}
distance operator+(distance d2)
{
distance d3;
d3.feet=feet+d2.feet;
d3.inches=(inches+d2.inches)%12;
d3.feet+=(inches+d2.inches)/12;
return d3;
}
};
void main()
{
distance d1,d2,d3;
d1.dist_assign(24,11);
d2.dist_assign(12,1);
d3=d1+d2;
d1.display();
d2.display();
d3.display();
getch();
}
```

www.StudyGuideIndia.com

www.StudyGuideIndia.com